OS No.38/2017 நாள்: 04.06.2019

போச்சம்பள்ளி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர். நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளர் திரு.தனசேகரன் அவரால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சிதம்பரம் | சாதி | : -- |
| தந்தை பெயர் | : லேட்.காளியப்ப முதலி | நாட்டினம் | : இந்து |
| கிராமம் | : விளாங்காமுடி | வேலை | : -- |
| தாலுக்கா | : போச்சம்பள்ளி | வயது | : 73 |

வா.சா.1 ___ சிதம்பரம் ஆஜர் குறுக்கு விசாரணை :-

நான் இவ்வழக்கில் வாதி. நான் என்னுடைய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதை என்னுடைய முதல் விசாரணையாக ஏற்க வேண்டுகிறேன். 27.06.1990ம் தேதியில் என் பெயரிலுள்ள ஏற்பட்ட தானசெட்டில்மெண்ட பத்திரத்தின் அசல் **வா.சா.ஆ.1** ஆகும். என் பெயரிலுள்ள வங்கி கணக்கு புத்தகம் அசல் **வா.சா.ஆ.2** ஆகும். 13.03.1995ம் தேதியில் நான் எஸ்.944, கிருஷ்ணகிரி கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்திற்கு எழுதிக்கொடுத்த அடமான கடன் பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.3** ஆகும். 29.08.2008ம் தேதி எஸ் 944 கிருஷ்ணகிரி கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தில் பெற்ற கடனை முழுவதுமாக செலுத்தி பெற்ற கடன் தீர்ந்த சான்று **வா.சா.ஆ.4** ஆகும். 25.11.2011ம் தேதியில் கிருஷ்ணகிரி கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் வழங்கிய ரசீது அசல் **வா.சா.ஆ.5** ஆகும். நான் வீடு கட்டுவதற்கு காவேரிப்பட்டிணம் ஊராட்சி ஒன்றியம் வழங்கிய கட்டிட அனுமதி வரைபடம் அசல் **வா.ச.ா.ஆ.6** ஆகும். என் பெயரிலுள்ள

செலுத்தப்பட்ட வீட்டு வரி ரசீதுகள் (எண்ணிக்கை 5) **வா.சா.ஆ.7** ஆகும். என் பெயரில் செலுத்தப்பட்ட மின் கட்டண ரசீதுகள் (எண்ணிக்கை 4) **வா.சா.ஆ.8** ஆகும். என்னுடைய டைரி குறிப்பு அசல் வா.சா.ஆ.9 ஆகும். என்னுடைய வீட்டின் புகைப்படம் **வா.சா.ஆ.10** ஆகும். 20.02.2012ம் தேதியில் நான் பிரதிவாதி பெயருக்கு பெயரளவில் ஏற்படுத்தி கொடுத்துள்ள கிரயப்பத்திரத்தின் அசல் **வா.சா.ஆ.11** ஆகம். 18.11.2016ம் தேதியில் என் பெயரில் தயாரித்து வைத்துள்ள கிரயப்பத்திரத்தின் அசல் **வா.சா.ஆ.12** ஆகும். 28.11.2016ம் தேதியில் நான் பிரதிவாதிக்கு அனுப்பிய சட்டஅறிவிப்பின் அலுவலக நகல் **வா.சா.ஆ.13** ஆகும். 02.12.2016ம் தேதியில் பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.14.** வழக்கு சொத்தின் அரசு வழிகாட்டி மதிப்பு வலைபதிவு **வா.சா.ஆ.15** ஆகும். தாவாப்படி தீர்ப்பாக வேண்டும்.

ஒம்./-ஏ. செல்வகுமார்,பி.இ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி.